**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி**

**முன்னிலை - திரு. R.பூமிநாதன், B.Sc.,B.L.,**

**நீதித்துறை நடுவர், நான்குநேரி**

**2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 22 ஆம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 318/2019**

**CNR No. TNTL 20-000890-2019**

| | |
|---|---|
| தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>ஏர்வாடி காவல்நிலையம்,<br>குற்ற எண். 99/2019. | **.... குற்றமுறையிட்டாளர்** |
| **/எதிர்/** | |
| ஐயப்பன், வயது 41/2019,<br>த/பெ. ராமசாமி,<br>93/2 வடக்கு தெரு,<br>தளபதிசமுத்திரம் மேலூர். | **.... குற்றஞ்சாட்டப்பட்டவர்** |

இவ்வழக்கானது கடந்த 18/07/2019-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு 22/07/2026-ம் தேதி வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 திரு.மைக்கேல் ஜெரால்டு அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வழக்கறிஞர் திரு.P.அருமைராஜ், அவர்களும் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

# தீர்ப்புரை

## வழக்கின் விபரங்கள்

| வரிசை எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | ஏர்வாடி காவல் நிலையம் குற்றஎண். 99/2019 | |
|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | ஐயப்பன் |
| | | தந்தை பெயர் | ராமசாமி |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | தளபதிசமுத்திரம் மேலூர் |
| | | வயது | 41/2019 |
| 2 | சம்பவ தேதி | | 04/06/2019 |
| 3 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை | | 18/07/2019 |
| 4 | கைது | | 04/06/2019 |
| 5 | பிணையில் விடுவித்ததல் | | 02/08/2019 |
| 6 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | | 22/07/2026 |
| 7 | விசாரணைத் துவக்கம் | | |
| | அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 06/08/2019 & 06/08/2019 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 01/06/2022 & 01/06/2022 |
| | அ.சா.3 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 15/05/2024 & 15/05/2024 |
| | அ.சா.4 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 15/05/2024 & 15/05/2024 |
| | அ.சா.5 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 15/05/2024 & 15/05/2024 |
| | அ.சா.6 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 25/03/2026 & 25/03/2026 |
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | | 22/07/2026 |
| 9 | விசாரணை முடிவு | | 22/07/2026 |
| 10 | தண்டனை அல்லது உத்தரவு | | 22/07/2026 |
| 11 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு /முடிவு | | 22/07/2026 |

| | | |
|---|---|---|
| 12 | காலதாமதத்தின் விளக்கம் | குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) **<u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u>**:

சாட்சி 1ன் மூத்தமகள் நம்பிநாச்சியாரை எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்ததாகவும், கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்பு சாட்சி 1ன் மூத்த மகள் உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டபடியால் எதிரி மது குடித்து பிள்ளைகளை கவனிக்காமல் இருந்து வந்ததாகவும், இதனால் எதிரியின் இரண்டு பிள்ளைகளையும் சாட்சி 1 வளர்த்து வந்ததாகவும், பேத்தியை பாளையங்கோட்டை சாரா டக்கர் மேல்நிலைப்பள்ளிலும், பேரனை வள்ளியூர் கிங்ஸ் பள்ளியிலும் படிக்க வைத்து வருவதாகவும், இந்நிலையில் பேத்தியை இந்த வருடம் விடுதியில் தங்கி படிக்க சேர்த்துள்ளதாகவும், சாட்சி 1 அவரது பேத்தியை விடுதியில் படிக்க வைத்து வருவது எதிரிக்கு பிடிக்காமல் இருந்து வந்ததாகவும், இந்நிலையில் 04.06.2019 ம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு சாட்சி 1 அவரது வீட்டில் இருக்கும் போது அங்கு வந்த எதிரி சாட்சி 1ஐ பார்த்து என் மகளை தன்னிடம் கேட்காமல் எப்படி விடுதியில் சேர்த்து படிக்க வைப்பாய் தேவடியா செறுக்கி புண்ட மவளே என்று பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்துமாறு அசிங்கமாக பேசி, கையால் சாட்சி 1ன் நெஞ்சிலும், இடது தலையிலும் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தியும், பின்னர் சாட்சி 1ஐ பார்த்து இன்று நீ தப்பி விட்டாய் இனிமேல் தன் மகளை தன்னிடம் கேட்காமல் எங்காவது சேர்த்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் செய்து உயிர்பயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக ஏர்வாடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **எதிரிக்கு கு.வி.மு. ச. பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல்** :

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு  வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

3) **குற்றச்சாட்டு வனைதல்** :

எதிரிக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர்  வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து  எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும்  பிரிவு 4 of TNPHW Act ன் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டுக்களை மறுத்துக் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

4) **அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:

(i) அ.சா.1 சிவகாமி  தனது சாட்சியத்தில் கடந்த 04.06.2019 ம் தேதி காலை 07.00 மணிக்கு காலை தனது வீட்டில் இருந்தபோது அங்கு வந்த எதிரி ஐயப்பன் தனது பேத்தி முத்துஅபிராமியை ஏன் ஹாஸ்டலில் சேர்த்தாய் என்று ஏசி கொண்டே தனது பேத்தியை உனது புருஷனுக்கு பிறந்ததா என்று தன்னை ஆபாசமாக பேசி அருவாமுனையால் தன்னை அறுக்க வந்து கையால் தன்னை சுவற்றில் தள்ளினார் என்றும், பின்னர் தான் வெளியே ஓடிவந்துவிட்டேன் என்றும் பின்னர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன் என்றும், மருத்துவமனையிலிருந்து ஏர்வாடி காவல்துறையினருக்கு தகவல் கொடுத்தார்கள் என்றும், பின்னர் காவல்துறையினர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு வந்து தன்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கி கொண்டனர் என்றும், தன்னிடம்

காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும், அதில் தனது கையெழுத்து உள்ளது என்றும், புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 தன்னை ஆபாசமாக பேசி, அடித்த எதிரி ஐயப்பன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார் என்றும், காவல்துறையினர் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.6 இமானுவேல் தனது சாட்சியத்தில் கடந்த 04.06.2019 ஆம் தேதி 12.00 மணிக்கு முதல்நிலை காவலர் முத்தையா என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது நான்குநேரி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சிகிச்சை முடிந்து வெளியே வந்த அழகுசுந்தரம் மனைவி சிவகாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைகேற்ப குற்ற எண். 99/2019 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act என்ற அ.சா.ஆ.2 வழக்கை பதிவு செய்தார் என்றும், தனது பார்வைக்கு வைத்த விசாரணை நகலை தான் எடுத்துகொண்டு 04.06.2019 ஆம் தேதி 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் காந்தி, லெட்சுமணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர், அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், சாட்சிகள் சிவகாமி, பிரேமா, அனுசியா, சுப்பிரமணியன், இசக்கியம்மாள் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தேன் என்றும், வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் கார்த்திகா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.5 காயச்சான்று வழங்கியுள்ளார் என்றும், புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரி குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act-ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :

இவ்வழக்கில் அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 10 சாட்சிகளில் 5,7,8,9 சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பில் விலக்கிக்கொண்டும், அரசு தரப்பில் அ.சா. 1 முதல் 6 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **<u>கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்</u>**:

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

7) **<u>அரசு தரப்பு வாதம்</u>**:

அரசு தரப்பில் அ.சா. 1 முதல் 6 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். 1,6 சாட்சியங்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும் படி வாதிடப்பட்டது.

8) **<u>எதிரி தரப்பு வாதம்</u>**:

எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 ன் சாட்சியத்தில் எதிரி அ.சா.1 ஐ பார்த்து என்ன வார்த்தையால் அசிங்கமாக ஏசினார் அதனால் அவமானம் ஏற்பட்டதாகவோ குறிப்பிட்டு கூறவில்லை என்றும், எதிரி அ.சா.1 க்கு கொலை மிரட்டல் விடுத்து அ.சா.1 ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றும், அ.சா.2,3 கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் சாட்சி 4 கேள்விப்பட்ட சாட்சி மற்றும் அ.சா.5 பார்வை மகஜர் சாட்சி ஆகியோர்கள் அரசு தரப்பில்

பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள நிலையில், எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், ஆகவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்யும்படி வாதிடப்பட்டது.

9) **<u>குற்றச்சாட்டு மீதான விவாதம்</u>** :

எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

10) **<u>Discussion on charge u/s.294 IPC</u>** :

அ.சா.1ன் தனது சாட்சியத்தில் "*கடந்த 04.06.2019 ம் தேதி காலை 07.00 மணிக்கு காலை தனது வீட்டில் இருந்தபோது அங்கு வந்த எதிரி ஐயப்பன் தனது பேத்தி முத்துஅபிராமியை ஏன் ஹாஸ்டலில் சேர்த்தாய் என்று ஏசிக்கொண்டே எனது பேத்தியை உமது புருஷனுக்கு பிறந்ததா என்று என்னை ஆபாசமாக பேசினார்*" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1ன் சாட்சியத்தில் எதிரி என்ன வார்த்தையால் அ.சா.1ஐ அசிங்கமாக ஏசினார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.சா.2,3 கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் அ.சா. 4 கேள்விப்பட்ட சாட்சி மற்றும் அ.சா.5 பார்வை மகஜர் சாட்சி ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் எதிரி அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக ஏசியதாகவோ அதனால் அதனை கேட்ட சாட்சிகளுக்கு அருவருப்பு ஏற்பட்டதாகவோ, அ.சா.1க்கு அவமானம், அசிங்கம் ஏற்பட்டதாக போதிய வாய்மொழி சாட்சியம் அரசு தரப்பில் முன்னிறுத்தப்படவில்லை. ஆகவே எதிரி மீதான இ.த.ச. பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

11) **<u>Discussion on charge u/s.323 IPC</u>** :

(i) அ.சா.1ன் தனது சாட்சியத்தில் '*அருவாமுனையால் தன்னை அறுக்க வந்து கையால் தன்னை சுவற்றில் தள்ளினார் என்றும், பின்னர் தான் வெளியே ஓடிவந்துவிட்டேன்*

*என்றும் பின்னர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன் என்றும், மருத்துவமனையிலிருந்து ஏர்வாடி காவல்துறையினருக்கு தகவல் கொடுத்தார்கள் என்றும், பின்னர் காவல்துறையினர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு வந்து தன்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கி கொண்டனர் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.*

(ii) ஆனால் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் "*சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேனா அல்லது போனேனா என்றால் நேரில் தான் போனேன் என்றும், காவல் நிலையத்திற்கு போனவுடன் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான்*" மேலும் "*அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலத்தில் ஸ்டேசனில் வைத்து கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் மருத்துவமனையில் வைத்து தான் போட்டேன், போலீசார் என்னை விசாரணை செய்யும் போது இரண்டு கையெழுத்துகள் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான்*" என்று முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவத்தை அ.சா.2 மற்றும் அ.சா.3 பார்த்து சத்தம்போட்டதாக புகார்வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.2,3 கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் அ.சா. 4 கேள்விப்பட்ட சாட்சி மற்றும் அ.சா.5 பார்வை மகஜர் சாட்சி ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி சாட்சியங்களிலிருந்து வழக்கு சம்பவம் நடந்த பிறகு அ.சா.1 ஏர்வாடி காவல் நிலையத்திற்கு நேரில் சென்று புகார்மனு கொடுத்தாரா அல்லது அ.சா.1 நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு சென்ற பின்பு காவல்துறையினர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு வந்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்களா என்பது குறித்து முரண்பாடு அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது. ஆகவே எதிரி மீதான இ.த.ச. பிரிவு 323 கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிருபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

12) **Discussion on charge u/s.506(1) IPC** :

அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில் எதிரி அ.சா.1க்கு பயம் மற்றும் அச்சம் ஏற்படுத்தியதாகவோ, குற்றமுறு மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியம் எதுவும் அரசு

தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.2,3 கண்ணுற்ற சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி சாட்சியத்தினை கொண்டு எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க தவறிவிட்டது. மேற்படி சாட்சியத்தின் படி எதிரி மீதான இ.த.ச. பிரிவு 506(1) கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

13) **Discussion on charge u/s.4 of TNPHW Act** :

(i) மேற்படி சாட்சியங்களின் படி அ.சா.1ன் பெண்மைக்கு எதிரி குந்தகம் ஏற்படுத்தியதாகவோ அ.சா. 1ஐ அவமானப்படுத்த வேண்டும் என்றோ குற்ற எண்ணத்தோடு செயல்பட்டார் என்றோ பயம், அச்சம் ஏற்படுத்தினார் என்றோ சாட்சியங்கள் எதுவும் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமையவில்லை. இந்த குற்றச்சாட்டை பொருத்து அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் கொண்டும் நிரூபிக்க தவறிவிட்டது. மேற்படி சாட்சியத்தின் படி எதிரி மீதான பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிருபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

14) **இறுதியாக,** அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படியும் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

15) **வழக்கு சொத்து மீதான உத்தரவு** :

இவ்வழக்கின் சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு சொத்து குறித்து எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.22 18:14:30 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

'**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. சிவகாமி (புகார்தாரர்) |
| அ.சா.2 | திருமதி. பிரேமா (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திருமதி. அனுசியா (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. சுப்பிரமணியன் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.5 | திருமதி. காந்தி (பார்வை மகஜர் சாட்சி) |
| அ.சா.6 | திரு. இமானுவேல் (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 04/06/2019 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 04/06/2019 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 04/06/2019 ம் தேதியில் பதிவு செய்த பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 04/06/2019 ம் தேதியில் பதிவு செய்த மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | அ.சா.1ன் காயச்சான்றிதழ் |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்** - இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**-இல்லை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.22 18:14:42 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 4. | எதிரியால் பிறப்பிக்கப்பட்ட பிணைபத்திரம் இன்றிலிருந்து 1 மாத காலத்திற்கு பின்பு தானாகவே இரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |